## *முத்திப்பேறு பெற்ற ஒலிவர் (-1681)*

இவர் அயர்லாந்து நாட்டினர். உத்தம கத்தோலிக்கர். இவர் இளம் வயதிலேயே குருவாக விரும்பினார். ஒரு மடாதிபதி இவரை ரோமைக்கு அனுப்பி வைத்தார். அங்கு குருப்பட்டம் பெற்றார். விசுவாசப் பரப்புதல் கல்லூரியில் 12 ஆண்டுகளாக பேராசிரியராக இருந்தார். இவரது கல்வியறிவையும், தூய வாழ்வையும் கண்டு எல்லோரும் நியமிக்கப்பட்டார். இவர் தம் நாட்டிற்குப் புறப்படும் போது, ஒரு பரிசுத்த குரு அவரை அரவணைத்து “நீங்கள் கத்தோலிக்க விசுவாசத்திற்காக இரத்தம் வடிக்கப் போகிறீர்கள்” என்றார். இவரோ, “இத்தகைய பாக்கியம் பெற நான் தகுதியற்றவன். என் ஆசை நிறைவேறும்படி நீங்கள் எனக்காக செபிக்க உதவி செய்யுங்கள்” என்றார்.

நாட்டை ஆண்டு வந்தவர்கள் கத்தோலிக்க ஆயர்களையெல்லாம் நாடு கடத்த முயன்றனர். நம் பேராயர் அசையவில்லை. எங்கும் சுற்றித் திரிந்து மக்களை ஊக்குவித்தார். நான்கு ஆண்டுகளில் 48,655 பேர்களுக்கு உறுதி பூசுதல் கொடுத்தார். கொடிய வேத கலகம் தொடங்கியது. மீத் நகர் சாகும் தறுவாயில் இருந்தார். அவருக்கு உதவி செய்யும்படி நம் ஆயர் டப்ளின் நகருக்குச் சென்றார். அங்கே இவரைப் பிடித்து சிறையில் வைத்து அநியாயமாய் குற்றம் சாட்டி இவரை சாவுக்குத் தீர்ப்பிட்டார்கள். இதைக் கேட்ட அவர் “கடவுளுக்கு நன்றி” என்று கூறினார்.

**சிந்தனை:**

துன்பம் வந்தாலும், இன்பம் வந்தாலும் கடவுளுக்கு நன்றி சொல்வோமாக.

**செபம்:**

ஆண்டவரே, அனைத்துக்காகவும் உமக்கு நன்றி.